


26.04.2025

தலைப்பு செய்திகள்

தேச கட்டமைப்பில் இளைஞர்கள் பங்கேற்பதன் மூலம் நாடு விரைவான வளர்ச்சியை எட்டி உலகளவில் முத்திரை பதிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

வாடிகன் நகரில் நடைபெறும் போப் ஃபிரான்சிஸின் இறுதிச்சடங்கில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு பங்கேற்றுள்ளார்.

சட்டப்பேரவையின் முன்னாள் மேலவை உறுப்பினர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் 35 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே தனியார் பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் தேசிய அளவிலான Bare bow வெற்றுவில் சாம்பியன்பட்ட போட்டிகள் இன்று தொடங்கின.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

ரோஜ்கர்

தேச கட்டமைப்பில் இளைஞர்கள் பங்கேற்பதன் மூலம் நாடு விரைவான வளர்ச்சியை எட்டி உலகளவில் முத்திரை பதிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 51 ஆயிரம் இளையோருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் திட்டத்தை காணொலி வாயிலாக புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்து பேசிய பிரதமர், இளையோரின் கடினஉழைப்பும், படைப்பாற்றல் திறனும் உலகத்தை ஈர்த்துள்ளதாக எடுத்துரைத்தார்.

தேச பொருளாதாரத்தை வலுப்படுத்தும் மிகப்பெரிய பொறுப்பு தங்கள் முன் உள்ளதை உணர்ந்து பணி வாய்ப்பு பெற்ற இளையோர் செயல்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

உள்நாட்டு பாதுகாப்பு, நவீன கட்டமைப்பு மேம்பாடு, தொழிலாளர்களின் வாழ்வில் மாற்றங்கள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு இளையோர் செயலாற்ற வேண்டுமென்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

மும்பையில் விரைவில் தொடங்கவுள்ள வேவ்ஸ் சர்வதேச பொழுதுபோக்கு ஒலி, ஒளி உச்சிமாநாடு இளைஞர்களின் திறன் மையமாக திகழும் என்றார்

ஊரக மகளிரின் ஆளுமைக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக கூறியஅவர், விண்வெளி, அறிவியல் உள்ளிட்ட உயர் பதவிகளில் பெண்கள் புதிய உச்சத்தை எட்டியிருப்பதாக மகிழ்ச்சி தெரிவித்தார்.

நாடுமுழுவதும் 47 இடங்களில் நடைபெற்ற ரோஸ்கர் வேலைவாய்ப்பு முகாமில் மத்திய அமைச்சர்கள் பணிநியமன ஆணைகளை இளையோருக்கு இன்று வழங்கினார்கள்.

திருச்சியில் இளையோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசிய மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ஜுவல்ஓரம், இளைஞர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற அழைப்பு விடுத்துள்ளார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின்கீழ் அனைவரும் ஒரு மரக்கன்றையாவது நடவேண்டுமென்று அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரிடமிருந்து பணி நியமன ஆணைகளை நேரில் பெற்றுக்கொண்ட இளையோர் எமது செய்தி பிரிவிடம் பேசுகையில்

.. வாய்ஸ் ..

சென்னையில் மத்திய அமைச்சர்கள் திரு. துர்காதாஸ் யுக்கி, டாக்டர் பெம்மசாணி சந்திரசேகர் உள்ளிட்டோர் பணி நியமன ஆணைகளை இன்று வழங்கினர்.

❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 121-வது முறையாக நாளைகாலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசை, Airnews இணையதளம், News on air செயலியில் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும்.

❖❖❖❖❖❖❖

போப் பிரான்சிஸ்

மறைந்த உலக கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் ஃபிரான்சிஸின் இறுதிச்சடங்கு வாடிகன் நகரில் தற்போது நடைபெறுகிறது.

இந்தியா சார்பில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு இதில் பங்கேற்றுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் போப் பிரான்சிஸ் சமுதாயத்திற்கு ஆற்றிய சேவையை உலகம் என்றென்றும் நினைவுகூறும் என்று கூறியுள்ளார்.

வாடிகன் செயின்ட்மேரி பசிலிக்காவில் அன்னாரது நல்லடக்கம் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

ஜக்தீப் தன்கர்

2 நாள் பயணமாக தமிழகம் வந்துள்ள குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் முதுமலை யானைகள் வளர்ப்பு முகாமை இன்று பார்வையிட்டார்.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் நாளை நடைபெறும் கருத்தரங்கில் அவர் தலைமையுரையாற்றுகிறார்.

அதனைத் தொடர்ந்து தமது தமிழக பயணத்தை முடித்துக்கொண்டு புதுதில்லி புறப்படுகிறார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

சட்டப்பேரவை முன்னாள் மேலவை உறுப்பினர்களுக்கான மாதாந்திர ஓய்வூதியம் 35 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவிறித்துள்ளார்.

பேரவையில் ஓய்வூதியம் சார்ந்த மானியக்கோரிக்கை விவாதத்தின் போது இதனை தெரிவித்த அவர், முன்னாள் சட்டமன்ற சட்ட மேலவை உறுப்பினர்களுக்கான மருத்துவப்படி ஒருலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.

மறைந்த முன்னாள் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை 17 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தப்படுவதாக கூறினார்.

……….. வாய்ஸ் ……………

❖❖❖❖❖❖❖

கொள்கை விளக்க குறிப்பு

தமிழ்நாட்டில் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுதியகால செலவீனங்களுக்கு நடப்பு நிதியாண்டில் 46 ஆயிரத்து 214 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை கொள்கை விளக்க குறிப்பில் இதனைத் தெரிவித்த அவர், ஜீவன் பிரம்மான் இணையதளம், இ-சேவை மையங்களை நேர்காணலுக்காக ஓய்வூதியதாரர்கள் அணுகலாம் என்றார்

ஓய்வூதியதாரர்களின் அனைத்து விவரங்களும் கருவூலம் இணையதளத்தில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றார்.

ஓய்வூதியதாரர்களின் குறைகளை களைய ஆட்சியர்கள் தலைமையில் ஆண்டிற்கு ஒருமுறை குறைதீர் கூட்டம் நடத்தப்படுவதாக கூறினார்

கடந்த ஓராண்டில் பெறப்பட்ட ஆயிரத்து 594 மனுக்களில், ஆயிரத்து 42 மனுக்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளது என்றார்.

சுற்றுச்சூழல் தொடர்பான கொள்கை விளக்க குறிப்பில் காலநிலை சவால்களை எதிர்கொள்ள பசுமை தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈர நில இயக்கம், நெய்தல் மீட்சி இயக்கம், காலநிலை மாற்ற இயக்கங்களின் மூலம் முன்னெடுப்புகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

பசுமை தமிழ்நாடு இயக்கம் மூலம் இதுவரை 10 கோடியே 86 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாகவும், அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 75 மரகத பூஞ்சேலைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

எ.வ.வேலு

தமிழகத்தில் எங்கெல்லாம் சுற்றுலா மாளிகை அவசியமோ, இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் கட்டப்படும் என்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரத்தின் போது பேசியஅவர், கோவை பகுதியில் 3 கட்டங்களாக நடைபெறும் சாலை விரிவாக்கப் பணிகளில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான முதல்கட்ட பணிகளில் 50 சதவிகிதம் முடிவடைந்திருப்பதாக கூறினார்.

இரண்டாம் கட்ட பணிகளுக்கான அனுமதி கிடைத்ததும் பணிகள் தொடங்கப்படும் என்றும்,

3-ம் கட்ட பணிகளை நிறைவேற்ற 70 சதவிகிதம் அளவிற்கு மட்டுமே நில எடுப்பு பணிகள் நடைபெற்றிருப்பதாகவும் கூறினார்.

மேலும் 15 சதவிகித நில எடுப்பு பணிகள் முடிவுற்றதும் அதற்கான பணிகளும் விரைவில் தொடங்கப்படும் என்றார்.

பேரவையில் கேள்வி நேரத்தின் போது வெளியான மேலும் சில தகவல்கள் :

புதுக்கோட்டை அன்னவாசல் பேரூராட்சி பகுதியிலுள்ள ஜல்லிக்கட்டு திடலில் குடிநீர் தொட்டி அமைக்கப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் உள்ள அங்கன்வாடி மையங்களில் விரைவில் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று சமூகநலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்தார்.

தேவைப்படும் இடங்களில் குழந்தைகள் மையம் புதிதாக கட்டப்படும் என்றார்.

மலைப்பகுதிகளில் சீரான மின் விநியோகம் வழங்க மின்துறை கூடுதல் கவனம் செலுத்தும் என்று மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி கூறினார்.

கன்னியாகுமரி மாவட்டம் குருசுமலை பகுதிக்கு மின்சாரம் வழங்க உரிய நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

சட்ட முன்வடிவு : உதயநிதி

கடன் வழங்கும் நிறுவனங்களின் கட்டாய வசூலிப்பு முறையை கட்டுப்படுத்த வகை செய்யும் சட்டமுன்வடிவை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று பேரவையில் தாக்கல் செய்தார்.

வலுக்கட்டாய கடன் வசூலிப்பு முறையால் ஏற்படும் இன்னல்களிலிருந்து பொருளாதாரத்தில் பின் தங்கிய மற்றும் நலிவடைந்த பிரிவினரை பாதுகாக்கவே இது கொண்டுவரப்படுவதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

கள்ளச்சாராயம், கணினி, மருந்து சரக்கு, வன குற்றவாளிகள், நில அபகரிப்பாளர்களின் குற்றச்செயலை தடுக்க வகை செய்யும் சட்டத் திருத்த மசோதாவை சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதியும் பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

அண்டை மாநிலங்களிலிருந்து மருத்துவ கழிவுகளை நமது மாநிலத்தில் கொட்டுவதை தடுத்து சம்மந்தப்பட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்யவும் இந்த மசோதா வகை செய்கிறது.

❖❖❖❖❖❖❖

வெடிவிபத்து

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே தனியார் பட்டாசு ஆலையில் இன்று நேரிட்ட வெடிவிபத்தில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

காயமடைந்த 5 பேர் சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உரிமம் பெற்று எம். புதுப்பட்டியில் செயல்பட்ட இந்த பட்டாசு ஆலையில் தொழிலாளர்கள் பட்டாசு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மருந்து கலவையில் உராய்வு ஏற்பட்டதால் இந்த விபத்து நேரிட்டதாக கூறப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு விரைந்த சிவகாசி தீயணைப்பு துறையினர் அப்பகுதியில் பரவிய தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் மீட்பு பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வருவாய் மற்றும் மத்திய பெட்ரோலிய வெடிபொருள் கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகள் இப்பகுதியில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே சேலம் மாவட்டம் கஞ்சநாயக்கம் பட்டி பட்டாசு வெடி விபத்தில் உயிரிழந்த 4 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்ச ரூபாய் வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

மீனவர்கள்

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 14 தமிழக மீனவர்கள் இன்று சென்னை வந்தடைந்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், தங்கச்சிமடம் பகுதிகளை சேர்ந்த இம்மீனவர்கள் சென்றமாதம் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்பாணம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மத்திய மாநில அரசுகளின் பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் இந்த 14 மீனவர்களும் விடுவிக்கப்பட்டு கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் இவர்கள் அனைவரும் சென்னை அனுப்பி வைக்கப்பட்டனர்.

மீனவளத்துறை அதிகாரிகள் இம்மீனவர்களை அவர்களது சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

❖❖❖❖❖❖❖

ஸ்ரீரங்கம்

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோவிலில் சித்திரை தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது

ஏராளமான பக்தர்கள் ரெங்கா ரெங்கா கோஷங்கள் முழங்க நம்பெருமாளை தரிசித்தனர்.

❖❖❖❖❖❖❖

வெற்று வில்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் தேசிய அளவிலான Bare bow வெற்றுவில் சாம்பியன்பட்ட போட்டிகள் இன்று தொடங்கின.

2 நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் தமிழகம், ஆந்திரா, மஹாராஷ்டிரா மாநிலங்களை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வில்வித்தை வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

மகளிர் கிரிக்கெட்

இந்தியா, இலங்கை, தென்னாப்பிரிக்க அணிகள் பங்கேற்கும் சர்வதேச மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி நாளை கொழும்பில் தொடங்குகிறது.

முதல் போட்டியில் இந்தியா - இலங்கையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தாவில் இன்றிரவு ஏழரை மணிக்கு கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - கிங்ஸ் லெவன் பஞ்சாப்பை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.